




dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்









| Vol: 02 | Issue: 277 | 4 Pages | 5.5.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 277 | 4 பக்கங்கள் | 5.5.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்**
**வீயா விழுமந் தரும்**

**விளக்கம்:**
களவு செய்து பிறர் பொருள் கொள்ளுதலில் ஒருவனுக்குஉள்ளமிகுந்தவிருப்பம்,பயன்விளையும் போது தொலையாதத் துன்பத்தைத் தரும்.

## மத அடிப்படையில் பயங்கரவாதிகள் நம்மை பிரிக்க அனுமதிக்க கூடாது: சசி தரூர் எம்.பி.



கொச்சி, மே.5

ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினர். இதில், அப்பாவி சுற்றுலா பயணிகள் 26 பேர் பலியானார்கள். இது நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு பின்னணியில் பாகிஸ்தானை சேர்ந்த பயங்கரவாத இயக்கத்திற்கு தொடர்பு உள்ளது என கூறப்படுகிறது.

இந்த கொடூர தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த ராமசந்திரன் என்பவரின் குடும்பத்தினரை கொச்சியில் உள்ள அவருடைய வீட்டுக்கு நேற்று நேரில் சென்று சந்தித்து, சசி தரூர் எம்.பி. ஆறுதல் கூறினார். இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அந்த குடும்பத்தினர் கருணையுடனும், கண்ணியத்துடனும் நடந்து கொண்டனர்.

இதனை நாம் பாராட்டியே ஆக வேண்டும். அவர்கள் செய்த விசயம், இந்தியா முழுமைக்கும் முக்கியம் வாய்ந்தது. நாம் யாராக இருக்க வேண்டும் என பயங்கரவாதிகள் முடிவு செய்ய நாம் விட்டு விட முடியாது. மத அடிப்படையில் நம்மை பிரிப்பதில் வெற்றியடைய விரும்புவதற்கு, பயங்கரவாதிகளை நாம் விட முடியாது.

நம் தேசத்திற்காகவும், தேசத்தின் வருங்காலத்திற்காகவும் நான் சிந்திக்கிறேன். பயங்கரவாதிகள் நம்மை மாற்றவோ, விருப்பம்போல் நம்மை உருவாக்கவோ அவர்களை நாம் விட முடியாது என்றும் கூறினார்.

## பாகிஸ்தானிய பெண்ணுடனான திருமணம் மறைப்பு; சி.ஆர்.பி.எப். வீரர் பணியில் இருந்து நீக்கம்



புதுடெல்லி, மே5

ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினர். இதில், அப்பாவி சுற்றுலா பயணிகள் 26 பேர் பலியானார்கள். இது நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு பின்னணியில் பாகிஸ்தானை சேர்ந்த பயங்கரவாத இயக்கத்திற்கு தொடர்பு உள்ளது என கூறப்படுகிறது.

இந்நிலையில், எல்லை கடந்த பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளித்தமைக்காக, பாகிஸ்தானுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை இந்தியா எடுத்து உள்ளது. அட்டாரி எல்லையில் ஒருங்கிணைந்த சோதனை சாவடி மூடல் மற்றும் சிந்து நதிநீர் ஒப்பந்தம் தற்காலிக ரத்து என அடுத்தடுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பாகிஸ்தானியர்கள் இந்தியாவுக்குள் பயணிக்க அனுமதி மறுப்பு போன்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. அவர்களை நாட்டில் இருந்து வெளியேறவும் இந்திய வெளியுறவு செயலகம் உத்தரவிட்டது. இந்திய வான்வெளியை பாகிஸ்தான் பயன்படுத்த முடியாத வகையில் அவற்றை இந்தியா மூடியது. பாகிஸ்தானுடன் அனைத்து வகையான தபால் மற்றும் பார்சல் சேவையை நிறுத்தியுள்ளது. இது போன்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழலில், சி.ஆர்.பி.எப். வீரர் ஒருவரின் செயல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. சி.ஆர்.பி.எப். வீரரான முனீர் அகமது, பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த பெண்ணை திருமணம் செய்து அதனை மறைத்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அவர் இதனை தெரிந்தே செய்த நிலையில், பணியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு உள்ளார்.

விசாகாலம் முடிந்தும் தெரிந்தே அவரை மறைத்து வைத்திருக்கிறார். அவருடைய செயல்கள், பணிக்கான நடத்தையை மீறும் வகையில் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. அதனுடன் தேச பாதுகாப்புக்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் உள்ளது என சி.ஆர்.பி.எப். வெளியிட்ட அறிக்கை தெரிவித்து உள்ளது.

## பிரதமர் மோடி மணிப்பூருக்கு செல்ல மறுப்பது ஏன்? கார்கே கேள்வி

புதுடெல்லி, மே.5

பிரதமர் மோடி மணிப்பூருக்கு செல்ல மறுப்பது ஏன் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வியெழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

நரேந்திர மோடி ஜி, மணிப்பூர் உங்கள் வருகைக்காகவும், அமைதி மற்றும் இயல்பு நிலை திரும்புவதற்காகவும் காத்திருக்கும் வேளையில், நாங்கள் உங்களிடம் மூன்று முக்கியமான கேள்விகளைக் கேட்க விரும்புகிறோம். மணிப்பூரில் உங்கள் கடைசி தேர்தல் பேரணி நடைபெற்ற ஜனவரி 2022 முதல் இன்று வரை, நீங்கள் 44 வெளிநாட்டுப் பயணங்களையும் 250 உள்நாட்டுப் பயணங்களையும் மேற்கொண்டுள்ளீர்கள். ஆனாலும் நீங்கள் மணிப்பூரில் ஒரு நொடி கூட செலவிடவில்லை. மணிப்பூர் மக்கள் மீது ஏன் இந்த அலட்சியமும் புறக்கணிப்பும்? அரசியல் பொறுப்பு எங்கே? இரட்டை எஞ்சின் அரசாங்கம் தனது குடிமக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கான அரசியலமைப்பு கடமையை ஏன் நிறைவேற்றத் தவறிவிட்டது? முதலமைச்சரை ஏன் முன்பே நீக்கவில்லை? இரட்டை எஞ்சின் அரசாங்கம் மணிப்பூரை இன்னும் தோல்வியடையச் செய்து வருகிறது.

உள்துறை அமைச்சகம் தற்போது அங்கு அதிகாரத்தில் இருந்தாலும், வன்முறை சம்பவங்கள் நிற்கவில்லை. உள்துறை அமைச்சர் அறிவித்த அமைதிக் குழுவுக்கு என்ன ஆனது? பாதிக்கப்பட்ட அனைத்து சமூக மக்களையும் டெல்லியில் வைத்து கூட நீங்கள் ஏன் பார்க்கவில்லை? அம்மாநிலத்திற்கு ஏன் ஒரு சிறப்பு நிவாரண தொகுப்பை அறிவிக்கக்கூடாது? மோடி ஜி, மீண்டும் ஒருமுறை நீங்கள் உங்கள் கடமையை (ராஜதர்மத்தை) நிலைநிறுத்தத் தவறிவிட்டீர்கள்."

இவ்வாறு அதில் கார்கே தெரிவித்துள்ளார்.

# திருப்பூர்: பள்ளத்தில் விழுந்து தம்பதி உயிரிழப்பு, மகள் படுகாயம்: முதல்அமைச்சர் நிவாரணம் அறிவிப்பு



திருப்பூர், மே.5

திருப்பூர் மாவட்டம் குள்ளாய்ப்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்தில் இருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்து நிவாரண உதவி அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

"திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சூரியநல்லூர் கிராமம், சேர்வக்காரம்பாளையத்தைச் சேர்ந்த நாகராஜ் (வயது 44) த/பெ.குழுந்தான் என்பவர், தனது மனைவி ஆனந்தி (வயது 38) மற்றும் மகள் தீட்சையா (வயது 12) ஆகியோருடன் நேற்று (3.5.2025) இரவு தனது இருசக்கர வாகனத்தில் வீட்டிற்குச் செல்லும் வழியில் தாராபுரம் – காங்கேயம் சாலை, குள்ளாய்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்தில் இருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்த விபத்து ஏற்பட்டதில் நாகராஜ் மற்றும் ஆனந்தி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து கோயம்புத்தூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தீட்சையா என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தீட்சையாவிற்கு ஒரு லட்சம் ரூபாயும் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்." இவ்வாறு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## மணமேல்குடியில் தவ்ஹீத் ஜமாஅத் நடத்திய இரத்த தான முகாம்; 22 யூனிட்டுகள் கொடையாக பெறப்பட்டது




அறந்தாங்கி மே 5

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வடக்கம்மாபட்டினம் கிளை சார்பாக மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது. இதில் 22 யூனிட்டுகள் இரத்தம் கொடையாக பெறப்பட்டது.

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வடக்கம்மாபட்டினம் கிளை மற்றும் அறந்தாங்கி அரசு மருத்துவமனை இணைந்து நடத்திய இம்முகாமில் மாவட்டத் தலைவர் சித்திக் ரகுமான் தலைமை வகித்தார். மாவட்ட மாணவரணிச் செயலாளர் ரகுமத்துல்லா, கிளை தலைவர் அமீர் அப்பாஸ், துணை செயலாளர் ரபீக் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக காவல் கண்காணிப்பாளர் காயத்ரி, மணமேல்குடி வட்டாட்சியர் பன்னீர்செல்வம், மணமேல்குடி அரசு மருத்துவர்ஜூனைத்கான் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இதில் துவக்க உரையாக மாவட்டத் தலைவர் சித்திக் ரகுமான் "ஒரு மனிதரை வாழ வைத்தவர் அனைத்து மனிதர்களையும் வாழ வைத்தவரைப் போன்றவர் ஆவார்" என்ற குர்ஆனின் போதனையின் அடிப்படையிலும் இஸ்லாம் என்பது பிறர் நலன் நாடக் கூடியது என்ற நபிகள் நாயகம் நற்போதனைகள் அடிப்படையிலும் இம்முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பேசினார். இந்த முகாமில் ஆர்வத்துடன் நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். மருத்துவ தகுதி அடிப்படையில் 22 யூனிட்கள் இரத்தம் கொடையாக பெறப்பட்டு அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. இதில் அரிய வகை இரத்தமும் கொடையாக பெறப்பட்டது. இரத்தம் வழங்கிய அனைவருக்கும் அறந்தாங்கி அரசு மருத்துவமனை மருத்துவர் ஹேமலதா சான்றிதழ்களை வழங்கினார். இறுதியாக மாவட்ட மருத்துவ அணிச் செயலாளர் சபியுல்லா நன்றியுரை நிகழ்த்தினார். மேலும் இம்முகாமில் பங்களிப்பு செய்த இரத்த வங்கி மேலாளர், அவரது குழுவிற்கும், இரத்தம் கொடையளித்த, கலந்து கொண்ட பொதுமக்கள், இதற்கான ஏற்பாடுகளை செய்த கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்தார்.

## தென்காசி மாவட்ட காவல்துறையினருக்கான வாராந்திர கவாத்து பயிற்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது



தென்காசி மாவட்ட காவல்துறையினருக்கான வாராந்திர கவாத்து பயிற்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S.அரவிந்த் அவர்களின் தலைமையில் தென்காசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தென்காசி மாவட்ட ஆயுதப்படை காவல் துறையினருக்கு வாராந்திர கவாத்து பயிற்சி நடைபெற்றது. பின்னர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் காவல்துறையினருக்கு அறிவுரைகளை வழங்கி, அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்..

## திருச்சி நகைச்சுவை மன்றம் சார்பில் சித்திரை சந்திப்பு




திருச்சி நகைச்சுவை மன்றம் சார்பில் சித்திரை சந்திப்பு நிகழ்ச்சி 27ஆம் தேதி ஏப்ரல் 2025 திருச்சி சீனிவாசா ஹாலில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் கவிஞர். இளஞ்சேட்சென்னி வரவேற்புரை ஆற்றினார். திரு. எஸ்.ஆர்.ஜி. சீத்தாராமன் தலைமை வகித்தார். திரு. ப. தனபால் வாழ்த்துரை வழங்கினார். மன்ற செயலாளர் திரு. க. சிவகுருநாதன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். " இந்தப் புன்னகை என்ன விலை?" என்ற தலைப்பில் திருச்சி யூனிவர்ஸ் பல் மருத்துவமனை நிறுவனர் Dr.பா. வைஷ்ணவி மகிழ்வுரை ஆற்றினார். மேலும்," கை நிறைய கவிதைகள் " என்ற தலைப்பில் கவிஞர். நெல்லை, ஜெயந்தா சிறப்புரை வழங்கினார். திரு. சி. சபாபதி நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திரு.மு.பாலசுப்ரமணியம் மன்ற பொருளாளர், திரு. கே. ராஜசேகர் திருச்சி மாநகராட்சி உறுப்பினர், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு மகிழ்ந்தனர்.

## சித்திரை பெருவிழா அரசுப் பொருட்காட்சி அமைச்சர் மூர்த்தி துவக்கி வைத்தார்



சித்திரை பெருவிழாவையொட்டி மதுரையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக ஆண்டுதோறும் அரசுப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது. அதன்படி இந்தாண்டு மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெறும் சித்திரை திருவிழாவின் அரசுப் பொருட்காட்சியை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார்.

இந்தப் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, பள்ளிக்கல்வித்துறை, இந்து சமய அறநிலையத்துறை ,காவல்துறை உள்ளிட்ட 27 அரசுத்துறை அரங்குகளும். மதுரை மாநகராட்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆவின், உள்ளிட்ட அரசு சார்பு நிறுவனங்கள் மூலம் 6 அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல அரசின் நலத்திட்டங்கள் அவற்றில் பயன்பெறும் வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் அரசுத்துறைகளின் சார்பாக கண்கவரும் வகையில் அரங்குகள் இடம் பெற்றிருந்தன.

மேலும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசுத்துறைகளின் சார்பாக சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. அதேபோல இளைஞர்கள் மற்றும் குழந்தை களுக்கு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த தனியார் விளையாட்டு மற்றும் கேளிக்கை அரங்குகள், பல்பொருள் விற்பனை அங்காடிகள் இடம்பெற உள்ளன. மேலும், தினந்தோறும் இன்னிசை கலைநிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. இன்று தொடங்கி 45 நாட்கள் தினமும் மாலை 03.45 மணி முதல் இரவு 10.00 மணி வரை பொருட்காட்சி நடைபெறுகிறது. இந்த அரசு பொருட்காட்சியின் நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.15. சிறியவர்களுக்கு ரூ.10 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




# பறிமுதல் செய்யப்பட்ட 806 கிலோ கஞ்சாவை தீயிட்டு அழித்த போலீசார்

மதுரை, மே.5

மதுரை மாவட்டத்தில் உள்ள 25க்கும் மேற்பட்ட காவல்நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் போலீசார் 806 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இதனையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட பொட்டலங்கள் நீதிமன்ற விசாரணைக்கு பின்னர் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகில் உள்ள பொத்தையடியில் இருக்கக்கூடி பயோமெட்ரிக் ஆலையில் போலீசார் தீயிட்டுஅழித்தனர். இதனைமுன்னிட்டுஅந்த ஆலைக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.



# சொத்து வரி மீண்டும் உயர்வா? ; தமிழக அரசு மறுப்பு

சென்னை, மே.5




நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மீண்டும் 6 சதவிகிதம் சொத்து வரியை உயர்த்தியுள்ளதாக வெளியான நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியானது. இந்த செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது, சொத்து வரி உயர்த்தப்படவில்லை என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசின் 15வது நிதிக்குழுவின் நிபந்தனைகளின்படி, ஒவ்வொரு நகர்ப்புற அமைப்பும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சியின் சதவிகிதத்தை ஒப்பிடுகையில் சராசரியாக 11.5 சதவிகிதம் சொத்துவரி வருவாயை உயர்த்தினால் மட்டுமே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு 15வது நிதிக்குழுவின் மானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனையைக் கருத்தில் கொண்டு 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சொத்துவரி அரசாணை எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்ஏ4) துறை, நாள் 5.9.2024ன்படி 6 சதவிகிதம் உயர்த்தப்பட்டது. அதன் பிறகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினால் சொத்துவரி எதுவும் உயர்த்தப்படவில்லை. இந்நிலையில், நாளிட்ட ஒரு நாளிதழில் "எவ்வித அறிவிப்புமின்றி உள்ளாட்சி அமைப்புகள், 6 சதவிகிதம் சொத்து வரியை மீண்டும் உயர்த்தி அமலுக்கு வந்துள்ளதாக" வெளியிடப்பட்டுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானதாகும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஜய்யை பார்க்கச் சென்ற காவலர் சஸ்பெண்ட்

மதுரை, மே.5



திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் நடக்கும் 'ஜனநாயகன்' படப்பிடிப்பில் நடிகர் விஜய் கலந்து கொள்வதற்காக, சென்னையில் இருந்து அவர் விமானம் மூலம் மதுரை சென்ற நிலையில், விஜய்யை பார்க்க, காலை முதலே அவரது கட்சியினர், ரசிகர்கள் மதுரை விமான நிலைய பகுதியில் திரண்டனர்.

இந்தசூழலில்விஜய்யை பார்ப்பதற்காக பணி நேரத்தில் அனுமதி கேட்டு சென்ற காவலர், சீருடை இல்லாமல் கட்சிக்கொடி அணிந்து கொண்டு விஜய்யை வரவேற்றுள்ளார். இது குறித்த வீடியோ வைரலாகி விமர்சனத்திற்கு உள்ளானது. இந்த வீடியோ ஆணையர் லோகநாதனின் பார்வைக்கு சென்றதை தொடர்ந்து, காவலர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக மதுரை தெப்பக்குளம் குற்றப்பிரிவு காவலராக பணியாற்றி வருபவர் கதிரவன் மார்க்ஸ், விளக்குத்தூண் ஸ்டேஷனில் மாற்றுப்பணியில் இருந்தார். மீனாட்சிஅம்மன்கோவில் பகுதியில் சித்திரைத் திருவிழாவில் அவருக்கு பாதுகாப்பு பணி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த சூழலில் எமர்ஜென்சி என பர்மிஷன் வாங்கிக்கொண்டு த.வெ.க. தலைவர் விஜய்யை பார்க்கச்சென்றதால் அவர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தருமபுரி: ஏ.டி.எம். எந்திரத்தை உடைத்து கொள்ளை முயற்சி

தருமபுரி, மே5




தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் அருகே உள்ள ஆர்.கோபிநாதம்பட்டியில் தனியார் வங்கிக்கு சொந்தமான ஏ.டி.எம். மையம் உள்ளது. இதில் 30க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பணம் எடுத்து வருகிறார்கள். நேற்று காலை அப்பகுதி பொதுமக்கள் ஏ.டி.எம். மையத்திற்கு பணம் எடுக்க சென்றனர். அப்போது அந்த ஏ.டி.எம். எந்திரம் உடைக்கப்பட்டு இருப்பததை கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து மொரப்பூர் போலீசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணலீலா மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். மேலும் அரூர் போலீஸ் துணை சூப்பிரண்டு கரிகால் பாரி சங்கர் வந்து உடைக்கப்பட்ட ஏ.டி.எம். எந்திரத்தை பார்வையிட்டார். அப்போது ஏ.டி.எம். எந்திரத்தை கடப்பரையால் உடைக்க முயற்சித்தும், பணம் எடுக்க முடியாததால் மர்ம நபர்கள் தப்பி சென்றதும் தெரியவந்தது. இதன் காரணமாக அதில் இருந்த பணம் கொள்ளை போகாமல் தப்பியது.

மேலும் கைரேகை நிபுணர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தடயங்கள் மற்றும் மர்ம நபர்களின் கைரேகைகளை பதிவு செய்தனர். பின்னர் மோப்பநாய் வரவழைக்கப்பட்டது. அது மையத்தில் இருந்து சிறிது நேரம் ஓடி விட்டு நின்றுவிட்டது. யாரையும் கவ்வி பிடிக்கவில்லை. தொடர்ந்து போலீசார் ஏ.டி.எம். மையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா மற்றும் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். இந்தசம்பவம்குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர். ஏ.டி.எம். எந்திரத்தை உடைத்து கொள்ளையடிக்க முயன்ற சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஐ.ஏ.எஸ் அதிகாரி சகாயத்திற்கு பாதுகாப்பு: காவல்துறை தகவல்

சென்னை, மே.5



முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான சகாயம், கிரானைட் ஊழல்களை கண்டுபிடித்து அம்பலப்படுத்தியதுடன், பல மலைகள் குவாரிகளால் அழிந்து போவதிலிருந்தும் தடுத்தார். அந்த வழக்கு விசாரணையில் சகாயம் ஆஜராகாத நிலையில், அவர் உயிருக்கு ஆபத்து இருப்பதால் அவர் வர இயலவில்லை என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இது பரபரப்பாக பேசப்பட்டது. இதையடுத்து நீதிமன்றத்தில் எவ்வித பயமும் இன்றி சாட்சியங்கள் அளிக்க ஏதுவாக அவருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் இருப்பின் போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

# 100 சதவீதம் தேர்ச்சி பெறும் அரசுப்பள்ளி விவரங்களை சமர்ப்பிக்க உத்தரவு

சென்னை, மே.5




10,12ம்வகுப்பு பொது தேர்வுகளில் 100% தேர்ச்சி பெறும் அரசுப் பள்ளிகள் விவரங்களை தேர்வு முடிவுகள் வெளி வந்த 10 நாட்களுக்குள் சமர்பிக்க வேண்டும் என பள்ளிக்கல்வித் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் கண்ணப்பன், அனைத்துமாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: தமிழகத்தில் 3,088 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 3,174 மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே 10, 12ம் வகுப்பு பொது தேர்வுகளில் 100 சதவீத தேர்ச்சி பெறும் அரசுப் பள்ளிகள் மற்றும் அதன் ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் கடந்த ஏப்ரல் 25ம் தேதி அறிவிப்பு வெளியானது. அதை செயல்படுத்தும் விதமாக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதும் 100 சதவீத தேர்ச்சி பெறும் அரசுப் பள்ளிகள் மற்றும் அதன் ஆசிரியர்களின் விவரங்களை சேகரிக்க வேண்டும். அவற்றை தொகுத்து அறிக்கையை 10 நாட்களுக்குள் இயக்குநரகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இதில் காலதாமதம் ஏற்படாதவாறு விரைந்து செயல்படுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வாலிபரிடம் பணம் கேட்டு கத்தியை காட்டி மிரட்டல்: 2 பேர் கைது

திருநெல்வேலி, மே.5

திருநெல்வேலி மாநகரம், சந்திப்பு பகுதியில் உள்ள ஒரு தனியார் திரையரங்கம் அருகே சாலையில் நடந்து சென்ற சந்திப்பு சி.என்.கிராமம், மேலத் தெருவை சேர்ந்த இசக்கிப்பாண்டி (வயது 28) என்பவரை, பாளையங்கோட்டை, நடுவக்குறிச்சியை சேர்ந்த உய்க்காட்டான் மகன் இசக்கிப்பாண்டி (38) மற்றும்பாளையங்கோட்டை, திம்மராஜபுரத்தை சேர்ந்த பேச்சி மகன் மகாராஜன்(38) ஆகிய 2 பேரும் வழிமறித்து, மது அருந்த பணம் கேட்டதாகவும், பணம் கொடுக்க மறுத்ததால் கத்தியை காட்டி மிரட்டியதாக கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த சந்திப்பு காவல் துறையினர் அந்த 2 பேரையும் கைது செய்து விசாரணை செய்தனர்.

# 16 வருடங்களாக குடும்பத்தை பிரிந்து மெரினா பகுதியில் சுற்றித்திரிந்த பெண் மகளுடன் சேர்த்து வைக்கப்பட்டார்: காவல் கரங்கள் மூலம் மீட்பு

சென்னை, மே.5

சென்னை காவல் ஆணையாளர் அருண் உத்தரவின் பேரில், கூடுதல் காவல் ஆணையாளர் விஜயேந்திர பிதாரி, மேற்பார்வையில் காவல் கரங்கள் உதவி மையம் மூலம் இதுவரை 8,233 வீடற்ற, ஆதரவற்ற நிலையில் உள்ள மக்கள் மீட்கப்பட்டுள்ளனர், கடந்த 30ம் தேதி சுமார் 40 வயது மதிக்கதக்க பெண் ரீட்டா சற்று மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் மெரினா காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் தலையில்அரிப்புநோயால் ஏற்பட்ட காயத்துடன் சென்னை மெரினா கடற்கரை 'நம்ம சென்னை' பின்புறம் உள்ள சர்வீஸ் ரோடு பகுதியில் ஆதரவின்றி படுத்திருந்ததார்.

அவரை காவல் கரங்கள் தன்னார்வலர் குழு உதவியுடன் மீட்டு அவருக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் முதலுதவி சிகிச்சை அளித்து முறைப்படி காப்பகத்தில் தங்க வைத்து பராமரிக்கப்பட்டு வந்தார். மீட்கப்பட்ட பெண்ணின் வீடியோவை போலீசார் சமூக வலைத்தளம் மூலம் பகிர்ந்தனர்.

இந்நிலையில் மீட்கப்பட்ட பெண்ணின் மகள் தேவதர்சினி (22) வீடியோவை பார்த்து காவல் கரங்கள் தன்னார்வலரிடம் தொடர்பு கொண்டார்.

சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட மீட்கப்பட்ட பெண் தனது அம்மா என்றும், தான் தென்காசி மாவட்டம், எஸ்பிஎம் தெரு, கலிங்கப்பட்டியை சேர்ந்தவர் என்றும் தனக்கு ஜோஸ்வா என்ற தம்பி உள்ளதாகவும் தெரிவித்தார். தனது தந்தை ராஜ்குமார் 16 வருடங்களுக்கு முன்பு அம்மாவை விட்டு பிரிந்து சென்றதால் அம்மாவிற்கு மனநிலை பாதிக்கப்பட்டு பெங்களூருவில் உள்ள காப்பகத்தில் பாராமரிக்கப்பட்டு வந்தார்.

கடந்த ஜனவரி மாதம் 2ம் தேதி காப்பகத்திலிருந்து வெளியே சென்றவர் திரும்பி வரவில்லை. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை என்றும் போலீசாரின் விசாரணையின் போது அவர் தெரிவித்தார். இதனையடுத்து காவல் கரங்கள் மூலம் மீட்கப்பட்டரீட்டாவை நேற்று முன்தினம் அவரது மகள் மற்றும் உறவினர்களை சென்னைக்கு வரவழைத்து மீண்டும் அவரது குடும்பத்துடன் சேர்த்து வைத்தனர்.

அம்மாதிரும்பகிடைக்க உதவிய சென்னை காவல் கரங்கள் குழுவினருக்கு மகள் தேவதர்சினி கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார்.

# பெரியார் பல்கலையில் திராவிட இலக்கியம்,இதழியல் பட்டய படிப்பு அறிமுகம்

சேலம், மே.5




சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் உள்ள முத்தமிழறிஞர் தமிழ் வேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் சார்பில், திராவிட இலக்கியம் மற்றும் இதழியல் என்ற ஓராண்டு பகுதிநேர முதுநிலைப் பட்டயப் படிப்பு நடத்தப்படவுள்ளதாக, துணைவேந்தர் ஜெகநாதன் அறிவித்துள்ளார். இப்படிப்பிற்கு, 2025 2026ம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை அறிவிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

திராவிட இலக்கியம் மற்றும் இதழியல் பட்டய படிப்பிற்கு, இளநிலைத் தமிழிலக்கியம், இளநிலை இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது முதுநிலைத்தமிழிலக்கியம், முதுநிலை இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் ஆகிய துறைகளில், ஏதேனும் ஒன்றை தற்போது பயின்று கொண்டிருக்க வேண்டும்.

பாடத்திட்டமாக, முதற் பருவத்தில் திராவிட இயக்க வரலாறு, திராவிட இலக்கியம், திராவிட இதழியல், உலக தத்துவ மரபில் திராவிடவியல், திராவிடவியலும் சமூக வளர்ச்சியும் ஆகியவையும் இரண்டாம் பருவத்தில் திராவிட இலக்கிய அழகியல், திராவிட இதழ்களின் நடையியல், திராவிட கலை ஊடகங்கள், திராவிடத் தத்துவவியல், திராவிடவியல் ஆய்வுகள் ஆகியவையும் பயிற்றுவிக்கப்படும்.

# பெண்களிடம் மரியாதை குறைவாக பேச்சு ஆயுதப்படைக்கு 2 ஏட்டுகள் மாற்றம்: கமிஷனர் அதிரடி




நெல்லை, மே.5

நெல்லை மேலப்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் பெண்கள் இருவர் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்னை தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். இதுதொடர்பாக விசாரணை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட பகுதிக்கு சென்ற ஏட்டுகள் ஜோசப், பட்டமுத்து ஆகியோர் புகார் அளித்த பெண்களை மரியாதை குறைவாக பேசியதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோசிடம், சம்பந்தப்பட்ட பெண்கள் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து விசாரணை மேற்கொண்ட கமிஷனர், விசாரிக்க சென்ற இடத்தில் பெண்களை மரியாதை குறைவாக பேசிய ஏட்டுகள் இருவரையும் ஆயுதப்படைக்கு மாற்றம் செய்து உத்தரவிட்டு உள்ளார். காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க வருபவர்களை கண்ணியமாக நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சமீபத்தில் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த அறிவிப்பு வெளியான சில நாட்களில் நெல்லை மாநகரில் அது தொடர்பான புகாரில் சிக்கிய போலீஸ்காரர்கள் ஆயுதப்படைக்கு மாற்றப்பட்டுள்ள சம்பவம், காவல் துறை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நாகையில் இருந்து கடலில் மீன்பிடிக்க சென்ற 19 மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர் தாக்குதல்: பல லட்சம் மதிப்புள்ள பொருட்கள் பறிப்பு

நாகப்பட்டினம், மே.5



நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த 19 மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் இரும்பு கம்பியால் தாக்கி பல லட்சம் மதிப்பிலான பொருட்களை பறித்து சென்றனர். நாகப்பட்டினம் அக்கரைப் பேட்டையை சேர்ந்தவர் ஆனந்த் (37). இவருக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த 1ம் தேதி காலை 8 மணிக்கு நாகை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து முரளி (38), சாமிநாதன் (30), வெற்றிவேல் (38), அன்பரசன் (36) ஆகிய 5 பேர் மீன்பிடிக்க சென்றனர்.

கோடியக்கரைக்கு கிழக்கே 30 நாட்டிக்கல் மைல் தொலைவில் கடந்த 2ம் தேதி மீன்பிடித்து கொண்டிருந்தபோது 2 பைபர் படகில் வந்த 6 இலங்கை கடற்கொள்ளையர் இரும்பு கம்பியால் தாக்கி அவர்களிடம் இருந்த 2 செல்போன்கள், 1 வாக்கி டாக்கி, ஜிபிஎஸ் கருவி உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர். அதே போல் வேதாரண்யம் அருகே வெள்ளப்பள்ளம் மீனவர் தெருவை சேர்ந்த சுமதிக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த 2ம்தேதி அதிகாலை 2 மணிக்கு வெள்ளப்பள்ளம் கடற்கரையிலிருந்து சென்ற பிரவீன் (24), இவரது சகோதரர் பிரதீபன் (22), குட்டியாண்டி (40), விஷால் (21), நதீஷ் (21) ஆகிய 5 பேர் ஆறுகாட்டுத்துறைக்கு தென்கிழக்கே 15 நாட்டிகல் மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது 4 படகுகளில் வந்த 6 இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்கி 50 கிலோ வலையை கடலில் தள்ளி விட்டனர்.


மேலும் 2 இன்ஜின், 3 செல்போன்கள், டிவி, எக்கோ சவுண்ட், ஜிபிஎஸ், வாக்கிடாக்கி ஆகியவற்றை பறித்து சென்றனர். வேளாங்கண்ணி அருகே செருதூர் சக்திவேல்(33) என்பவரின் பைபர் படகில் சென்ற பரமசிவம்(35), பூம்புகாரை சேர்ந்த சக்திவேல் (33), இளையராஜா(45), கலியமூர்த்தி (48) ஆகிய 4 மீனவர்கள்செருதூர்துறைமுகத்தில் இருந்து கடந்த 2ம் தேதி கோடியக்கரைக்கு தென்கிழக்கே 20 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன்பிடித்தபோது 2 பைபர் படகில் வந்த 4 கடற்கொள்ளையர் தாக்கி ஐஸ்பாக்ஸ், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை பறித்து சென்றனர்.

அதே போல் செருதூரை சேர்ந்த மாணிக்கவேல் என்பருக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த 2ம் தேதி சென்ற சற்குணம்(38), சுகந்தன்(39), விஸ்வநாதன்(27), சூசைராஜ்(55), ஏசுதாஸ்(40) ஆகிய 5 மீனவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கே 15 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது 2 படகில் வந்த 6 பேர் நாகப்பட்டினம் மீனவர்களை தாக்கி விட்டு சென்றனர். காயமடைந்த 19 மீனவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இது குறித்து கடலோர காவல் குழும போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் நாகை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் கூறுகையில், 'மீன்பிடி தடைக்காலம் என்பதால் பைபர் படகுகள் மட்டுமே மீன்பிடிக்க செல்லும்.

இந்திய நாட்டின் எல்லைக்குள்மீன்பிடித்த நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் கழுத்தில் 12 அடி நீள அரிவாளை வைத்து மிரட்டியும், சில மீனவர்களை கடலில் தள்ளி அச்சுறுத்தியும் பல லட்சம் மதிப்புள்ள மீன்பிடி உபகரணங்கள், மீன்கள்ஆகியவற்றைஇலங்கை கடற்கொள்ளையர்கள் பறிமுதல் செய்து சென்றுள்ளனர். நமது நாட்டின் எல்லைக்குள் மீன்பிடித்த மீனவர்களை மீது தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையர்கள் மீது ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக முதல்வர் இந்த விசயத்தில் தலையிட்டு ஒன்றிய அரசை வற்புறுத்த வேண்டும். கடற்கொள்ளையர்களால் கடலில் தள்ளப்பட்ட மீனவர்கள் நீச்சல் அடித்தும் அந்த வழியாக வந்த மற்ற படகுகள் உதவியுடன் கரை சேர வேண்டிய அபாய நிலை ஏற்பட்டது என்றனர்.

# சரக்கு ரயிலில் பெட்ரோல் கசிவு: விபத்து தவிர்ப்பு



சோழவந்தான், மே.5

மதுரை அருகே கப்பலூரில் உள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு தர்மபுரி பகுதியில் இருந்து பெட்ரோல் ஏற்றிய 34 டேங்கர்களுடன் சரக்கு ரயில் நேற்று வந்தது. வழக்கமாக காஸ், பெட்ரோல், டீசல் உள்ளிட்டவைகளை ஏற்றி வரும் சரக்கு ரயில்களில் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை கசிவு ஏதும் உள்ளதா என ரயில்வே ஊழியர்கள் சோதனையிடுவது வழக்கம். இதன்படி நேற்று சோழவந்தான் ரயில் நிலையத்தில் நிறுத்தி, அந்த சரக்கு ரயிலின் டேங்கர்களை ஊழியர்கள் சோதனையிட்டனர்.

அப்போது பின் பகுதியில் சுமார் 70 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு உடைய 31வது டேங்கரில் பெட்ரோலை வெளியேற்றும் பைப் வால்வு பகுதியில் பெட்ரோல் கசிந்துள்ளது. இது குறித்து உடனடியாக மதுரை பராமரிப்பு பிரிவினருக்கு ஊழியர்கள் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து ரயில்வே பராமரிப்பு ஊழியர்கள் விரைந்து வந்து பெட்ரோல் கசிவை அடைத்து சரி செய்தனர். அதன் பின்னர் சுமார் 2 மணி நேரம் கழித்து சோழவந்தானிலிருந்து ரயில் கிளம்பியது. பெட்ரோல் கசிவினை கண்டறிந்து ஊழியர்கள் துரிதமாக செயல்பட்டதால், பெரும் விபத்துதவிர்க்கப்பட்டது.

# தூத்துக்குடி: மே 25 வரை கோடை கால அறிவியல் பயிற்சி முகாம் கலெக்டர் தகவல்


தூத்துக்குடி, மே.5

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி இணைந்து பள்ளி மாணவர்களின் கோடை கால விடுமுறையை பயனுள்ள அறிவுப் பயணமாக மாற்றும் நோக்கத்தில், 'ஏனென்று கேள்' எனும் தலைப்பில் கோடை கால அறிவியல் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி முகாம் இன்று (மே 3) முதல் மே 25ம்தேதிவரைதூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட அம்பேத்கர்நகர் பகுதியில் அமைந்துள்ள அறிவியல் பூங்கா (STEM PARK) வளாகத்தில் வைத்து நடைபெறவுள்ளது. இதில் 3ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்கள் முற்றிலும் இலவசமாக பங்கு பெறலாம்.

தினமும் மாலை 3 மணி முதல் 7 மணி வரை மாணவர்களின் அறிவியல் சிந்தனையை ஊக்குவிக்கும் வகையில் வகுப்புகளும் செய்முறைப் பயிற்சிகளும் நடைபெறும். மேலும், இம்முகாமில் முதற்கட்டமாக, கணக்கும் இனிக்கும், கைகளில் கண்ணாம் பூச்சி, அறிவியல் பரிசோதனைகள், ஓரிகமி, கற்பனையும் கைத்திறனும், பொம்மலாட்டம், பலூனில் பொம்மைகள், மந்திரமா தந்திரமா, அறிவியல்கோமாளி, அறிவியல் ஆனந்தம், கதை சொல்வோம் கதை உருவாக்குவோம், விளையாட்டை கற்போம், நம்பு வீர்களா? போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் நடைபெறும்.



அதுமட்டுமல்லாமல், முகாம் நாட்களில் தினந்தோறும் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை சதுரங்கப் பயிற்சி சிறந்த பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலுடன் நடத்தப்படும். தொடர்ந்து, அறிவியல் பூங்காவில் இடம்பெற்றுள்ள அனைத்து அறிவியல் சாதனங்களின் பயன்கள் குறித்து அறிவியல் வல்லுனர்களால் விளக்கம் அளிக்கப்படும். எந்தவொரு செயல்பாடுகளிலும் மாணவர்கள் மத்தியில் "ஏன்?" என்ற கேள்வி எழுப்பும் நோக்கில் ஒரு சூழலை உருவாக்கும் விதமாக இம்முகாம் அமையப்பெறவுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள காலக்கட்டத்தில் வாராந்திர சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை குழந்தைகளின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் அறிவியல் பூங்காவில் உள்ள சிறு திரையரங்கில் திரைக்காட்சி முறையில் திரையிடப்பட்டு, திரைப் படத்தில் அறிவியல் சார்ந்த உள்ளடக்கங்களை விளக்கி உரையாற்றவுள்ளனர்.

எனவே, குழந்தைகளின் அறிவியல் திறனையும், ஆர்வத்தையும் ஊக்குவிக்கச் செய்வது, அவர்களது எதிர்கால அறிவியல் பயணத்திற்கு ஒரு வலுவான அடித்தளமாக அமையும் என்ற அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கோடை கால அறிவியல் பயிற்சி முகாமில் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தங்களது குழந்தைகளை பங்குபெற செய்து முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இந்த கோடை கால அறிவியல் பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்கு 95976 13988, 82207 50082 ஆகிய கைபேசி எண்களிலும் அல்லது அறிவியல் பூங்காவிற்கு (STEM Park) நேரில் சென்றும் முன்பதிவு செய்து கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# உயர் நீதிமன்ற மத்தியஸ்த மையத்தில் வழக்கு தொடருபவர்களுக்கான நீதிமன்ற கட்டணத்தை குறைக்க வேண்டும்: தலைமை நீதிபதிக்கு வழக்கறிஞர் சங்கம் கோரிக்கை

சென்னை, மே.4

சென்னைஉயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்க தலைவர் ஜி.மோகனகிருஷ்ணன், செயலாளர் ஆர்.கிருஷ்ணகுமார், துணைத்தலைவர் எஸ்.அறிவழகன் மற்றும் நிர்வாகிகள், தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராமிடம் கொடுத்த கோரிக்கை மனு அளித்தார். அதில் கூறியிருப்பதாவது: பெரிய நிறுவனங்கள்மற்றும்தொழில் அமைப்புகள் தொடர்பான வழக்குகள் உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சமரச பேச்சு வார்த்தை நடத்துவதற்காக உயர் நீதிமன்றத்தில் மத்தியஸ்த மையம் உள்ளது. மாற்று முறை தீர்வாக செயல்படுத்தப்படும் இந்த மத்தியஸ்தம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் ஒரு குழு உள்ளது.



இந்த குழுவில் நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் இடம்பெற்றுள்ளனர். மத்தியஸ்தம் செய்வதற்கான நீதிமன்ற கட்டணம் டெல்லி, கொல்கத்தா, மும்பை உயர் நீதிமன்றங்களைவிட பல மடங்கு உள்ளது. இதனால், பெரும்பாலான நிறுவனங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகாமல் மற்ற உயர் நீதிமன்றங்களை நாட தொடங்கியுள்ளன. இதனால், தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உயர் நீதிமன்ற வளாகத்தில் சர்வதேச மத்தியஸ்த மையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விழுப்புரம்: சிறுமியை கர்ப்பமாக்கிய வாலிபர் மீது வழக்கு

விழுப்புரம், மே.5

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த செவலபுரைகிராமத்தை சேர்ந்தவர் கொத்தமல்லி மகன் சின்னராசு(வயது 19). இவர் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு மேல்மலையனூர் அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த 15 வயது சிறுமியை அங்காளம்மன் கோவிலுக்கு அழைத்து சென்று தாலி கட்டி திருமணம் செய்து கொண்டார். பின்னர் அவர் சிறுமியை தான் வேலை செய்யும் செங்கல் சூளைக்கு அழைத்துச் சென்று உல்லாசம் அனுபவித்து வந்தார்.

இதனால் தற்போது அந்த சிறுமி 8 மாத கர்ப்பிணியாக உள்ளார். இது பற்றிய தகவல் அறிந்த சமூகநலத்துறை அதிகாரிகள் குறிப்பிட்ட அந்த செங்கல் சூளைக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். அப்போது சிறுமி திருமண வயதை அடையவில்லை என்பது தெரியவந்தது.



இது குறித்து மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய ஊர்நல அலுவலர், செஞ்சி அனைத்து மகளிர் போலீ்ஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

அதன்பேரில்சிறுமியை திருமணம் செய்து கர்ப்பிணியாக்கிய சின்னராசு மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை வெற்றி பெறச் செய்வோம்: நயினார் நாகேந்திரன்



சென்னை, மே.5

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளபதிவில், சென்னைக்கு வருகைபுரிந்த பாஜகவின் தேசியத் தலைவர் ஜேபி நட்டா முன்னிலையில் தமிழக பாஜகவின் சிறப்பு மையக்குழுகூட்டம்நடைபெற்றது. இதில் பாஜகவின் மற்ற மூத்த தேசிய, மாநிலத் தலைவர்கள், மூத்த நிர்வாகிகள் மற்றும் மையக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஜேபி நட்டா, தமிழகத்தில் நமது கட்சியை மேலும் பலப்படுத்துவது, வரும் சட்டமன்ற தேர்தலில் அயராது களப்பணியாற்றி, மக்கள் விரோத திமுக ஆட்சியை வீழ்த்துவது, அதிக அளவில் பாஜகவின் வெற்றி வேட்பாளர்களைத் தமிழக சட்டமன்ற த்திற்குள் அனுப்புவது என பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் அவரது ஆலோசனைகளின் படி நமது பாஜகவின் தலைவர்களும் தொண்டர்களும் மக்களோடு இணைந்து, வரும் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை வெற்றி பெறச்செய்வோம் என உறுதி ஏற்றோம். என தெரிவித்துள்ளார் .

# வைகை அணையில் 8ந்தேதி தண்ணீர் திறப்பு



மதுரை, மே.5

மதுரை சித்திரை திருவிழாவில், கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவம் நடைபெறும். இதை முன்னிட்டு வைகை அணையில், போதுமான நீர் இருப்பு இருந்தால்தண்ணீர்திறந்து விடப்படுவது வழக்கம்.

இந்தநிலையில் மதுரை சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி நடந்து வருகிறது. விழாவில் சிகர நிகழ்ச்சியான கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழா, வருகிற 12 ந்தேதி அதிகாலை 5.45 முதல் 6.05 மணிக்குள் நடைபெறஉள்ளது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பார்கள். கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழாவுக்காக, வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி வருகிற 8ந்தேதி மாலை 6 மணிக்கு தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது. பகல் நேரத்தில் வெயில் தாக்கம் அதிகமாக உள்ளதால், இரவில் தண்ணீர் திறக்கப்பட உள்ளது. அதன்படி 8ந்தேதி மாலை 6 மணி முதல் வருகிற 12ந்தேதி மாலை 6 மணி வரை மொத்தமாக 215 மில்லியன் கனஅடி தண்ணீர் திறக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. தண்ணீர் வேகமாக செல்லும் வகையில் ஆரம்பத்தில் வினாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு, அதன்பிறகு படிப்படியாக குறைக்கப்படும் என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

# தொழிலாளியை அவதூறாக பேசி மிரட்டல்: வாலிபர் கைது

திருநெல்வேலி மே.5

நெல்லை மாவட்டம், வள்ளியூர், தெற்கு கள்ளிகுளம், சந்தன மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த தீபபாலன் (வயது 28), கோட்டை கருங்குளம், வடிவம்மன்பட்டி, மேற்கு தெருவை சேர்ந்த மாதவன் (29) என்பவரோடு (Fabrication Sheet work) வேலை செய்து வந்துள்ளார். இந்நிலையில் தற்போது தீபபாலன் வேறு ஒப்பந்ததாரரிடம் வேலை செய்து வருகிறார். மாதவனிடம் வேலை செய்த நேரத்தில் தீபபாலனுக்கு ஒரு நாள் சம்பளம் பாக்கியாக இருந்துள்ளது.

இதனால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

30.4.2025 அன்று தீபபாலன் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த மாதவன் தீபபாலனிடம் தகராறில் ஈடுபட்டு அவதூறாக பேசி மிரட்டல் விடுத்து சென்றுள்ளார். இதுகுறித்து தீபபாலன் வள்ளியூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.




அந்த புகாரின் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் ராஜேஷ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு மாதவனை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

# 3 பல்கலைக்கழகங்களுக்கான துணைவேந்தர் தேடுதல் குழு அமைப்பு

சென்னை, மே.5

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் வழங்காததை கண்டித்து, தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கில் அரசுக்கு ஆதரவாக தீர்ப்பு வந்தது. இந்த தீர்ப்பின் அடிப்படையில், துணைவேந்தர்கள் இல்லாத பல்கலைக்கழகங்கள், பதவி கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்கு, புதியதுணைவேந்தர்களை தேர்ந்தெடுக்கும் தேடுதல் குழுவை தமிழக அரசு நியமித்து வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு துணைவேந்தர்கள் தேடுதல் குழு அமைக்கப்பட்டது.




இந்த நிலையில், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் என 3 பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர் தேடுதல் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை, உயர்கல்வித்துறை பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு குழுவிலும் 3 பேர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த குழு, தகுதியான 3 பேர்களை தேர்ந்தெடுத்து அரசுக்கு பரிந்துரை செய்யும். அதில், ஒருவரை அரசு துணைவேந்தராக தேர்ந்தெடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு: சாராயம் காய்ச்சப்படுகிறதா? டிரோன் மூலம் கண்காணிப்பு

ஈரோடு, மே.5

ஈரோடு மாவட்டத்தில் சட்டவிரோதமாக மது மற்றும் கஞ்சா விற்பனை செய்யப்படுவதற்கு கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக போலீசார் அவ்வப்போது சாராயம் விற்பனை மற்றும் சாராயம் காய்ச்சுதல் குறித்து சோதனை நடத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டம்சென்னிமலை அருகே, மணிமலை கரடு பகுதியில், கள்ளச்சாராயம் காய்ச்சப்படுகிறதா என அவ்வப்போது போலீசார் சோதனை செய்து வருகின்றனர்.



இந்த பகுதியில் சாராயம் தயாரிக்க பயன்படும் வெள்ளை வேலபட்டை மரம் 1 லட்சத்திற்கும் மேல் உள்ளது. இதனால் அப்பகுதிகளில் போலீசார் டிரோன் மூலம் தீவிர ஆய்வு நடத்தி வருகின்றனர்

# திருப்பூர் பஞ்சு ஆலையில் பயங்கர தீ விபத்து ரூ. 50 லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதம்



திருப்பூர், மே.5

திருப்பூர்மாவட்டம் பல்லடம் அருகே மங்கலம் அக்ரஹாரபுத்தூர் பகுதியை சேர்ந்த பஷீர் அராபத் என்பவர் கழிவுப்பஞ்சுகளை அரைத்து நூல் தயாரிக்கும் ஆலையை நடத்தி வருகிறார். வாடகைக்கு கட்டிடம் எடுத்து கடந்த ஒன்றரை வருடங்களாக இந்த தொழிலை செய்து வருகிறார்.

பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது திடீரென கழிவு பஞ்சுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த குடோனில் தீ பற்றியது. தீ முழுவதுமாக பரவி கழிவு பஞ்சுகள் மற்றும் எந்திரங்கள் அனைத்தும் முழுவதுமாக எரிந்து சேதமடைந்தன. உள்ளே பணியில் இருந்த தொழிலாளர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பல்லடம் தீயணைப்பு துறை வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். கூடுதலாக தண்ணீர் லாரிகள் வரவழைக்கப்பட்டு தீ அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாஅல்லதுவேறு காரணங்களால் தீப்பற்றியதா என மங்கலம் போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேமுதிகவில் இருந்து விலகுவதாக கூறவில்லை: நல்லதம்பி விளக்கம்

சென்னை, மே.5

நான் தேமுதிகவிலிருந்து விலகுவதாக ஒரு போதும் கூறவில்லை என்று தேமுதிக இளைஞரணி செயலாளராக இருந்த முன்னாள் எம்எல்ஏ நல்லதம்பி விளக்கம் கொடுத்துள்ளார். கட்சியிலிருந்து விலகுவதாக பொய்யான தகவலை பரப்பியுள்ளனர். தேமுதிகவில் இருந்து ஒருபோதும் விலக மாட்டேன் என்று அவர் வீடியோ மூலம் விளக்கம் கொடுத்துள்ளார்.

அந்த விடியோவில் அவர் கூறியிருப்பதாவது, நான் அளித்த கடிதத்தில், பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறு கேட்டேன். விடுவிக்காதபட்சத்தில் நான் ஒதுங்கிக்கொள்வேன் என்றுதான் சொன்னேன். இது ஊடகங்களில் தவறாக பரப்பப்பட்டு, நான் கட்சியிலிருந்தே விலகுவதாகச் சொன்னார்கள்.



ஒரு காலமும் நான் என்னை அறிமுகப்படுத்திய விஜயகாந்த் கட்சியிலேயே தொடர்ந்து பயணிப்பேன். உயிர் மூச்சு உள்ளவரை அவரது தொண்டனாகவேஇருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

# மகளிர் பயணத் திட்டத்தில் ஒரே நாளில் அதிகபட்சமாக 13.59 லட்சம் பேர் பயணம்

சென்னை, மே.5

சென்னை, மாநகர்போக்குவரத்துக் கழக பஸ்களில் மகளிர் விடியல் பயண திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் தற்போது வரை சுமார் 132.91 கோடி பேர் பயணித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் 3.65 கோடி பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர். மகளிர் விடியல் பயண திட்டம் அறிமுகமானதில் இருந்து இது வரை ஒரே நாளில் அதிகபட்சமாக கடந்த ஏப்ரல் 28ந் தேதி அன்று 13.59 லட்சம் பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர். மேற்கண்ட தகவலை சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் தனது சமூக வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ளது.



# கூடலூர்: குடிநீர் குழாய்களில் பழுது சரி செய்யப்பட்டது

கூடலூர், மே.5

கூடலூர் நகராட்சிக்கு உட்பட்ட மக்களுக்கு ஓவேலி பகுதியில் உள்ள குடிநீர் திட்ட தடுப்பணைகளில் இருந்து ராட்சத குழாய்கள் மூலம் தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது. இந்த நிலையில் கூடலூர் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி அருகே பல்வேறு தெருக்களுக்கு செல்லும் வகையில் குடிநீர் குழாய்களின் இணைப்பு மையம் உள்ளது. கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக அப்பகுதியில் பழுது ஏற்பட்டு இருந்தது. இதனால் தினமும் குடிநீர் அதிகமாக வெளியேறி சாலையில் வீணாக வழிந்தோடியது. இதை கண்ட பொதுமக்கள் அதிருப்தி அடைந்தனர். இதை தடுக்க சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுப்பது, குடிநீர் குழாய்களில் ஏற்பட்ட பழுதை சரி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதுகுறித்து 'தினத்தந்தி 'யில் கடந்த மாதம் 30ந் தேதி படத்துடன் செய்தி வெளியானது. இதைத் தொடர்ந்து கூடலூர் நகராட்சி ஆணையாளர் ஸ்வேதாஸ்ரீ, குடிநீர் வீணாகும் இடத்தில் உள்ள குழாய்களில் பழுதை சரி செய்யும் படி உத்தரவிட்டார். அதன்படி நகராட்சி குடிநீர் குழாய் ஆய்வாளர் ரமேஷ் தலைமையிலான ஊழியர்கள் கூடலூர் அரசு மேல்நிலைப்பள்ளி முன்பு குடிநீர் குழாய்களை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். அப்போது குழாய்களை இணைக்கக்கூடிய வால்வு பகுதியில் பழுது ஏற்பட்டது தெரியவந்தது. இதனால் பழுதான பகுதியில் புதிய உதிரி பாகங்களை கொண்டு சரிசெய்தனர். இதுகுறித்து குடிநீர் வினியோக ஊழியர்கள் கூறும் போது, குறிப்பிட்ட இடத்தில் பழுது சரிசெய்யப்பட்டு உள்ளது. இதனால் வரும் நாட்களில் தண்ணீர் வீணாக வெளியேற வாய்ப்பில்லை என்றனர். இதற்காக உரிய நடவடிக்கை எடுத்த நகராட்சி அதிகாரிகளுக்கும், 'தினத்தந்தி 'க்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.



# தவெகவில் இருந்து வைஷ்ணவி விலகல்

கோவை, மே.5

தவெகவில் இருந்து விலகுவதாக வைஷ்ணவி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

3 மாதங்களாக மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். நீயெல்லாம் ஒரு பெண்ணா? உனக்கெல்லாம் எதுக்கு அரசியல், ஒழுங்கா வீட்டுக்குள்ளேயே இரு. உனக்கு என்ன தெரியும் அரசியலை பற்றி வசம்பு வார்த்தைகளால் நசுக்கப்படுகிறேன். என்னுடையமக்கள் பணிக்கு ஒரு சிலர் முற்றுப்புள்ளிவைக்கநினைக்கிறார்கள். அது ஒருபோதும் நடக்காது. மக்களுக்கான சேவையை எந்த தளத்தில் இருந்தாலும் நான் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன். நான் என்னை தமிழக வெற்றிக் கழகத்தில் இருந்து முழுமையாக விடுவித்துக்கொள்கிறேன். என்னுடைய பணியாற்றிய அனைத்து தொண்டர்களும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்" என்று தெரிவித்துள்ளார்.



தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

5.5.2025

# பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதியில் உச்சத்தில் தேங்காய் விலை; கிலோ ரூ.65க்கு விற்பனை



பொள்ளாச்சி, மே.5
பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களில், போதிய மழையில்லாமல் தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.65வரை விலை போவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களில் தென்னைவிவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. இங்கு சாகுபடி செய்யப்பட்ட தென்னையிலிருந்து உற்பத்தியாகும் தேங்காய், கொப்பரை, மஞ்சி உள்ளிட்டவை வெளியிடங்களுக்கு விற்பனைக்காக அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகிறது. இதனால், பொள்ளாச்சியில் உற்பத்தியாகும் தென்னை சார்ந்த பொருட்களுக்கு, இன்றும் நல்ல வரவேற்பு உள்ளது.

சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள தென்னைகளில் உற்பத்தியாகும் தேங்காய் உள்ளூர் மட்டுமின்றி, வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் குறிப்பிட்ட விலை நிர்ணயித்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் வாரத்தில் ஞாயிறு மற்றும் புதன், வியாழக்கிழமைகளில் நடக்கும் சந்தை நாளின் போது சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து விவசாயிகள் கொண்டுவரும் தேங்காய், ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

இதில், இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை அடுத்தடுத்து பெய்ததால் தேங்காய் உற்பத்தி அதிகமானதுடன், மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது.

இதனால், கடந்த ஆண்டில் ஒவ்வொரு தேங்காயும் சுமார் 350கிராம் முதல் ரூ.750 கிராம் வரையில் இருந்தது. மார்க்கெட்டுக்கு தேங்காய் வரத்து அதிகமாக இருந்ததால், ஒருகிலோ தேங்காய் ரூ.30 முதல் ரூ.45வரை என குறைவான விலைக்கு விற்பனை செய்யப்பட்டது.

ஆனால், கடந்த ஆண்டில் பருவமழை அடுத்தடுத்து இருந்தும் தேங்காய் உற்பத்தி மிகவும் குறைந்தது. அதிலும் கடந்த சில மாதமாக மழையில்லாமல் தென்னைகளில் காய்க்கும் தேங்காயின் பருமன் மிகவும் குறைவானது.

மேலும், விவசாயிகள் கொண்டு வரும் தேங்காயின் எடை சுமார் 200 முதல் அதிகபட்சமாக 550 கிராம் வரையிலே உள்ளது. இருப்பினும், நாளுக்குநாள் தேங்காய் உற்பத்தி குறைவால், தேங்காய் விலை தொடர்ந்து ஏறுமுகமாக உள்ளது.

இதில், தற்போது மார்க்கெட்டுகளில் ஒருகிலோ தேங்காய் ரூ.60 முதல் அதிகபட்சமாக 65வரை என வழக்கத்தைவிட கூடுதல் விலைக்கு விற்பனையாகிறது. கடந்த சில மாதமாக, தேங்காய் விலை உயர்வால் வாடிக்கையாளர்கள் அதிருப்தியடைகின்றனர்.

தேங்காய் உற்பத்தி காரணமாக, பொள்ளாச்சியிலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் தேங்காய்களின் எண்ணிக்கையும் கனிசமாக குறைந்துள்ளதால் விலையேற்றமடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# காலி பணியிடங்களை நிரப்பக்கோரி அங்கன்வாடி பணியாளர்கள் தொடர்ந்து போராட்டம்



திருவள்ளூர், மே.5
காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும், ஆண்டுதோறும் கோடை விடுமுறை மே மாதங்களில் 15 முதல் 30 நாட்கள் அளிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அங்கன்வாடி ஊழியர்கள், உதவியாளர்கள் இன்று 2வது நாளாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கன்வாடி பணியாளர்கள் கடந்தாண்டு ஆர்ப்பாட்டம் நடத்திய போது கோடை விடுமுறை 15 நாட்கள் அதாவது மே மாதத்தில் விடப்பட்டது. இந்தாண்டும் மே மாதத்தில் அரசு விடுமுறை அளிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இதன்படி, கடந்த மாதம் விடுமுறை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக தமிழ்நாடு அரசு சார்பில் கூறப்பட்டது.

ஆனால் மே மாதத்துக்கான விடுமுறை இதுவரை அளிக்கப்படவில்லை. இதையடுத்து அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் சங்கத்தை சார்ந்த 500க்கும் மேற்பட்டவர்கள் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக நுழைவாயிலை முற்றுகையிட்டு நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர். கலெக்டர் அலுவலக நுழைவாயிலில் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் 500க்கும் மேற்பட்ட பெண் ஊழியர்கள் கடும் வெயிலில் குடைகள் மற்றும் தாங்கள் கொண்டு வந்திருந்த பேனரை தலைமீது வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தநிலையில், திருவள்ளூர் கலெக்டர்அலுவலகத்தில் இன்று 2வதுநாளாகஅங்கன்வாடி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# தென்காசி சங்கரன்கோவிலில் கனமழை; சங்கரநாராயணசுவாமி கோயிலில் மழைவெள்ளம் புகுந்தது: முழங்கால் அளவு தண்ணீரில் பக்தர்கள் தரிசனம்



சங்கரன்கோவில், மே.5
சங்கரன்கோவிலில் பெய்த கனமழையால் சங்கரநாராயணசுவாமி கோயிலில் மழைவெள்ளம் புகுந்தது. முழங்கால் அளவுக்கு தேங்கிய தண்ணீரில் பக்தர்கள் தரிசனம் செய்தனர். தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று காலை வெயில் கொளுத்தியது. பிற்பகலில் வெயிலின் தாக்கத்தால் பொதுமக்கள் வெளியே வர அச்சப்பட்டனர். இந்நிலையில் மாலை 4 மணிக்கு பிறகு மேகக்கூட்டங்கள் திரண்டு திடீரென இடியுடன் கனமழை பெய்தது. இதனால் நகரின் பல பகுதிகளில் மழைநீர் தேங்கியது. சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

மேலும் சங்கரநாராயண சுவாமி கோயிலுக்குள் மழைவெள்ளம் புகுந்து சங்கரலிங்கசுவாமி சன்னதி, கோமதி அம்பாள் சன்னதி, சண்முகர் சன்னதி ஆகிய பகுதிகளில் முழங்கால் அளவிற்கு தண்ணீர் தேங்கியது. இதனால் பக்தர்கள் கடும் சிரமத்திற்குள்ளாகினர். நேற்று வெள்ளிக்கிழமை என்பதால் வெளியூரில் இருந்து கோயிலுக்கு வந்த பக்தர்கள் மழை நீருக்குள் நின்று சுவாமி தரிசனம் செய்தனர். இதுகுறித்து பக்தர்கள் கூறுகையில், 'மழை நேரங்களில் எல்லாம் சங்கரநாராயண சுவாமி கோயிலுக்குள் தண்ணீர் புகுவது வாடிக்கையாக உள்ளது. கோயிலுக்குள் மழைநீர் வராத வண்ணம் நிரந்தர தீர்வு காண வேண்டும்' என்றனர்.

# கடலுக்கு செல்லாத விசைப்படகுகள்... மீன்கள் விலை கிடுகிடு உயர்வு

தூத்துக்குடி, மே.5
மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளதால் விசைப்படகுகள் கடலில் மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால் நாட்டுப்படகு மீனவர்கள் மட்டுமே கடலுக்கு மீன்பிடிக்க செல்வதால் மீன்களின் வரத்து குறைந்தது. இதனால் அவற்றின் விலை கிடுகிடுவென்று உயர்ந்தது. ஒரு கிலோசீலாமீன்ரூ.1,600க்கு விற்பனைசெய்யப்பட்டது.

தமிழகத்தில் மீன்பிடித் தடைக்காலம் கடந்த மாதம் 15ந்தேதி தொடங்கி, அடுத்த மாதம் (ஜூன்) 14 ந்தேதி வரை 61 நாட்கள் அமலில் உள்ளது.

இதையொட்டி தூத்துக்குடியில் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. அவர்கள் தங்கள் விசைப்படகுகளில் உள்ள பழுதுகளை நீக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டுப்படகு மீனவர்கள், பைபர் படகு மீனவர்கள் வழக்கம்போல் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வருகின்றனர்.

இவர்கள் பிடித்து வரும் மீன்களை வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர். இவர்கள்பிடித்துவரும் மீன்கள் போதுமானதாக இல்லை என்பதால் மீன்களின் விலை உயர்ந்துள்ளது.

தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற ஏராளமான நாட்டுப் படகு, பைபர்படகு மீனவர்கள் நேற்று கரைக்கு திரும்பினர். தற்போது கோடை வெயிலின் தாக்கம் காரணமாக போதிய மீன்பாடு கிடைக்கவில்லை.

இதனால் திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடி துறைமுகத்தில் நேற்று மீன்களின் வரத்து குறைவாக காணப்பட்டது. எனினும் அங்கு மீன்கள் வாங்குவதற்காக ஏராளமான வியாபாரிகளும், பொதுமக்களும் குவிந்ததால் மீன்களின்விலைகிடுகிடுவென்று உயர்ந்தது.

கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.1300 முதல் 1500 வரை விற்பனையான சீலா மீன் நேற்று ரூ.1600க்கு விற்பனையானது. அதுபோல் விளை மீன், ஊளி, பாறை மீன்கள் கிலோ ரூ.600 முதல் ரூ.700 வரையும், நண்டு கிலோ ரூ.800 வரையும், நகரை மீன் கிலோ ரூ.500 வரையும், கேரை மீன் கிலோ ரூ.300 வரையும், சூரை மீன் கிலோ ரூ.250 வரையும், வங்கனை மீன் ஒரு கூடை ரூ.1750 வரையும் விற்பனையானது.

சாளை மீன்கள் வரத்து அதிகமாக காணப்பட்டதால் ஒரு கூடை ரூ.1500 முதல் ரூ.1800 வரை விற்பனையானது. மீன்களின் வரத்து குறைவாக காணப்பட்ட நிலையிலும் மீன்களுக்கு நல்ல விலை கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# நரிக்குறவரைத் தாக்கிய அதிமுக நிர்வாகி



திருவண்ணாமலை, மே.5
போளூர் அருகே நியாயம் கேட்கப் போன நரிக்குறவர்களை அதிமுக ஊராட்சி முன்னாள் தலைவர் தாக்கியதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. டூவீலரில் சென்ற நரிக்குறவரை முந்த முயன்ற வேன் மோதியதில் நரிக்குறவர் கை, கால் முறிவு; நியாயம் கேட்கச் சென்ற உறவினர்களை பால் வண்டி உரிமையாளரும் அதிமுக ஊராட்சி முன்னாள் தலைவருமான கணேஷ் தாக்குதல் நடத்தியுள்ளார்

# நடிகை மஞ்சு வாரியரின் இடுப்பை தொட்ட இளைஞரால் பரபரப்பு



மலையாள சினிமாவின் முன்னனி நடிகைகளில் ஒருவர் மஞ்சு வாரியர். இவர் தமிழில் 'அசுரன், துணிவு, விடுதலை 2, வேட்டையன்' போன்ற படங்களில் முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ளார். மேலும் ஆர்யா, கவுதம் கார்த்திக் கூட்டணியில் உருவாகி வரும் 'மிஸ்டர் எக்ஸ்' படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் நடிகை மஞ்சு வாரியர் சமீபத்தில் ஷாப்பிங் மால் திறப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டார். அவரைக் காண ஏராளமான ரசிகர்கள் அங்கு திரண்டனர். அப்போது நடிகை மஞ்சு வாரியர் தன் காரில் நின்றபடி ரசிகர்களை பார்த்து கையசைத்து கொண்டிருந்தார்.

அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள ரசிகர்கள் முண்டியடித்தனர். அந்த கூட்டத்தில் இளைஞர் ஒருவர் மஞ்சுவாரியரின் இடுப்பில் கை வைத்து அழுத்தி விட்டார். இதனால் அவர் செய்வதறியாமல் திகைத்து நின்றார். இதையடுத்து பதற்றத்துடன் நடிகை திரும்பி பார்த்த போது அந்த மர்ம நபர் அந்த இடத்தில் இல்லை. இது தொடர்பான வீடியோ காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஒரே நாளில் வெளியான டூரிஸ்ட் பேமிலி, ரெட்ரோ படங்களின் வசூல் விவரம்




கடந்த மே 1ந் தேதி தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு தமிழ் சினிமாவில் 'டூரிஸ்ட் பேமிலி மற்றும் ரெட்ரோ' ஆகிய இரண்டு படங்கள் வெளியாகின. இந்த 2 படங்களுமே ரசிகர்களிடம் நல்ல விமர்சனத்தை பெற்று வருகின்றன. இந்த நிலையில் இந்த இரண்டு படங்களில் வசூல் குறித்த விவரத்தை காண்போம்.

அபிஷன் ஜீவிந்த் இயக்கத்தில் சசிகுமார் மற்றும் சிம்ரன் நடிப்பில் குடும்ப கதையில் வெளியான 'டூரிஸ்ட் பேமிலி' மக்களிடையே அமோக வரவேற்பை பெற்று வருகிறது. இந்த நிலையில் இப்படம்இதுவரைரூ.6கோடிவசூல்செய்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் சூர்யா மற்றும் பூஜா ஹெக்டே நடிப்பில் ஆக்சன், காதல் கதையில் வெளியான 'ரெட்ரோ' படம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இப்படம் இதுவரை உலக அளவில் ரூ.50 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இப்படி இரண்டு படங்களுமே ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு இருப்பதால், வார இறுதி நாள்களான இன்றும், நாளையும் வசூல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விஜய் சேதுபதியின் புதிய படம்.. டைட்டில் டீசர் வெளியீடு



இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் புதிய படம் உருவாகி வருகிறது. இது விஜய் சேதுபதியின் 52வது படமாகும். சத்ய ஜோதி பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்த படத்தில் நித்யா மேனன், யோகி பாபு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஏற்கனவே 19(1)(ஏ) என்ற மலையாள படத்தில் விஜய் சேதுபதியும், நித்யாமேனனும் இணைந்து நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடும்பப் பின்னணியைக் கதையாக வைத்து உருவாகியுள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது. விஜய் சேதுபதி பாண்டிராஜ் இருவரும் முதல் முறையாக இணைந்துள்ளதால் இந்த படத்துக்கு ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த படத்தில் விஜய் சேதுபதி புரோட்டா மாஸ்டராக நடித்துள்ளதாக சொல்லப்படுகிறது. இந்த நிலையில் இப்படத்தின் டைட்டில் டீசர் வெளியாகி உள்ளது. அதில் இப்படத்திற்கு 'தலைவன் தலைவி' என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

# ஐ.பி.எல்.லில் குறைந்த ரன் வித்தியாசத்தில் 5 முறை வெற்றியை தவற விட்ட சென்னை அணி

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் விளையாடின. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற சென்னை அணி முதலில் பந்துவீசுவது என முடிவு செய்தது.

இதனை தொடர்ந்து விளையாடிய பெங்களூரு அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 213 ரன்கள் குவித்தது. எனினும், போட்டியில் 5 விக்கெட்டுகளை இழந்து சென்னை அணி 211 ரன்களையே எடுத்தது. இதனால், 2 ரன்கள் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

அந்த அணியை சேர்ந்த ஷெப்பர்டு ஆட்ட நாயகன் விருது பெற்றார். அவர், 14 பந்துகளில் (4 பவுண்டரிகள், 6 சிக்சர்கள்) 53 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் விளையாடி, ஆட்டத்தின் போக்கை வெற்றியை நோக்கி திருப்பினார். இந்த ஐ.பி.எல். போட்டிகளில் குறைந்த ரன் வித்தியாசத்தில் சென்னை அணி 5 முறை வெற்றியை தவற விட்டுள்ளது.

இவற்றில், 2019ம் ஆண்டில் பெங்களூரு அணிக்கு எதிராக 1 ரன் வித்தியாசத்திலும், அதே 2019ம் ஆண்டில் மும்பை அணிக்கு எதிராக 1 ரன் வித்தியாசத்திலும் வெற்றி பெறாமல் போனது.

2025ம் ஆண்டில் பெங்களூரு அணிக்கு எதிராக 2 ரன்கள் வித்தியாசத்திலும், 2023ம் ஆண்டில் ராஜஸ்தான் அணிக்கு எதிராக 3 ரன்கள் வித்தியாசத்திலும், 2018ம் ஆண்டில் பஞ்சாப் அணிக்கு எதிராக 4 ரரன்கள் வித்தியாசத்திலும் வெற்றியை தவற விட்டது.

# ஐ.பி.எல்.: இளம் வயதில் அரை சதம் அடித்த வீரர்களின் வரிசையில் ஆயுஷ் மாத்ரே



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் விளையாடின. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற சென்னை அணி முதலில் பந்துவீசுவது என முடிவு செய்தது. இதனை தொடர்ந்து விளையாடிய பெங்களூரு அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 213 ரன்கள் குவித்தது. இதன்பின்பு சென்னை அணி விளையாடியது. இந்த போட்டியில் 17 வயதேயான ஆயுஷ் மாத்ரே குறைந்த பந்துகளில் அரை சதம் அடித்து அசத்தியுள்ளார். இதன்படி, அவர் 8.5வது ஓவரில் விளையாடியபோது, அரைசதம் (25 பந்துகளில்) எடுத்துள்ளார். ஐ.பி.எல். போட்டியில் அவருடைய முதல் அரைசதம் இதுவாகும். இதனால், இளம் வயதில் குறைந்த பந்துகளில் அரை சதம் எடுத்தவர்களின் பட்டியலில் அவர் இடம் பெற்றுள்ளார். இளம் வயதில் அரை சதம் அடித்த வீரர்களின் பட்டியலில், ராஜஸ்தான் அணியை சேர்ந்த வைபவ் சூரியவன்ஷி (14 வயது) குஜராத் அணிக்கு எதிராகவும், ராஜஸ்தான் அணியை சேர்ந்த ரியான் பராக் (17 வயது) டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு எதிராகவும், சென்னை அணியை சேர்ந்த ஆயுஷ் மாத்ரே (17 வயது) பெங்களூரு அணிக்கு எதிராகவும் அரை சதம் அடித்து அசத்தி உள்ளனர். இவர்கள் 18 வயதுக்குள் இந்த சாதனையை படைத்துள்ளனர். இதேபோன்று, ராஜஸ்தான் அணியை சேர்ந்த சஞ்சு சாம்சன் (18 வயது) பெங்களூரு அணிக்கு எதிராகவும், டெக்கான் சார்ஜர்ஸ் அணியை சேர்ந்த பிருத்வி ஷா (18 வயது) கொல்கத்தா அணிக்கு எதிராகவும் அரை சதம் எடுத்துள்ளனர்.

சென்னை அணியில் இடம் பெற்றிருந்த சுரேஷ் ரெய்னா (21 வயது) மும்பை அணிக்கு எதிராக 2008ம் ஆண்டில் அரை சதம் அடித்து இந்த வரிசையில் இடம் பெற்று உள்ளார். சென்னை அணியின் ஆயுஷ் மாத்ரே 94 ரன்கள் (48 பந்துகள் 9 பவுண்டரிகள், 5 சிக்சர்கள்) எடுத்திருந்த நிலையில், சிக்சர் அடிக்க முயன்றபோது, குருணால் பாண்ட்யாவிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். இதனால், அவருடைய சதம் அடிப்பதற்கான முயற்சி நிறைவேறாமல் போனது.

# ஐ.பி.எல் தொடர் முடிவதற்குள்.... ராகுல் உடனான நட்பு குறித்து கெவின் பீட்டர்சன் கருத்து

நடப்பு ஐ.பி.எல். தொடரில் அக்சர் படேல் தலைமையிலான டெல்லி கேப்பிடல்ஸ் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. அந்த அணி இதுவரை 10 ஆட்டங்களில் ஆடி 6 வெற்றி, 4 தோல்வி கண்டு புள்ளிபட்டியலில் 5வது இடத்தில் உள்ளது. இந்த அணியின் சிறப்பான செயல்பாடுகளுக்கு மிக முக்கிய காரணமாக உள்ளவர் கே.எல். ராகுல். கடந்த ஆண்டு லக்னோவுக்காக ஆடிய ராகுல் இந்த சீசனில் அந்த அணியில் இருந்து விலகி மெகா ஏலத்தில் கலந்து கொண்டார். அவரை டெல்லி அணி ஏலம் எடுத்தது. தற்போது டெல்லிக்காக மிகச்சிறப்பாக ஆடி வரும் ராகுல் அந்த அணியின் வெற்றிக்கு மிக முக்கிய காரணமாக உள்ளார். நடப்பு தொடரில் டெல்லி அணியின் ஆலோசகராக இங்கிலாந்து முன்னாள் வீரர் கெவின் பீட்டர்சன் செயல்பட்டு வருகிறார்.

ஐ.பி.எல் இல்லாத நேரங்களில் வர்ணனை செய்து வரும் பீட்டர்சன் இந்திய வீரர்களின் ஆட்டம் குறித்து எப்போதுமே விமர்சனத்தை வைக்கக் கூடியவர். அப்படி கே.எல் ராகுல் குறித்தும் அவர் பலமுறை விமர்சித்துள்ளார். அதற்கு கே.எல். ராகுலும் தனது கருத்தின் மூலம் பதிலடி கொடுத்துள்ளார். காரசாரமாக மோதிக்கொண்ட இவர்களுக்கு பெரிய நட்பு என்பதெல்லாம் கிடையாது. ஆனால், தற்போது டெல்லி அணியின் நட்சத்திர வீரராக ராகுல் விளையாடி வரும் வேளையில் அந்த அணியின் ஆலோசகராக இருக்கும் கெவின் பீட்டர்சன் கே.எல். ராகுலுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

இந்நிலையில், தான் கெவின் பீட்டர்சன் கே.எல். ராகுல் உடனான தனது உறவு குறித்து பேசியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, கே.எல். ராகுலுடன் என்னுடைய நட்பு எப்படி உள்ளது என்பது உங்களுக்கு தெரியும். ஆனால், தற்போது அதனை மேம்படுத்தி வருகிறேன். எங்கள் இருவருக்குள் தற்போது நல்ல நட்பு மலர்ந்து வருகிறது. இந்த ஐ.பி.எல் தொடர் முடிவதற்குள் நாங்கள் நெருங்கிய நண்பர்களாகி விடுவோம் என்ற நம்பிக்கையும் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.